மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், உத்தமபாளையம்.

**முன்னிலை: திரு. A. சரவண செந்தில் குமார், B.Com., B.L.,**
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
உத்தமபாளையம்.

திருவள்ளுவராண்டு 2054 ஸ்ரீ சோபகிருது வருடம் ஆடி மாதம் 04-ம் நாள்
2023-ம் ஆண்டு ஜுலை மாதம் 20-ம் நாள் வியாழக் கிழமை

**IA 3/2023 /in/ OS 101 /2022**
(Original Suit CNR No. TNTH06-000-153-2022)

R. மகேந்திரன் :: மனுதார் / வாதி

**/எதிர்/**

S. ரவிக்குமார் (எ) ரவி :: எதிர்மனுதார் / பிரதிவாதி

-------

இம்மனுவானது 13-07-2023-ம் தேதி என் முன்பாக இறுதியான விசாரணைக்கு வந்தபோது மனுதாரர் / வாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. த. மீனாட்சி சுந்தரம் அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதார் நீதிமன்றத்தில் அழைத்தும் ஆஜராகாத காரணத்தினால் , எதிர்மனுதாரருக்கு எதிராக 01-07-2023-ம் தேதி ஒருதலைபட்சமாக்கப்பட்டும் , தோன்றா தரப்பினராக்கப்பட்டும் மனுதார் தரப்பு வாதங்கள் கேட்கப்பட்டும் ஆவணங்களை பரிசீலனை செய்தும் இதுநாள் வரை என் கவனமான பரிசீலனையில் இருந்து வந்தும் இன்று இந்நீதிமன்றம் கீழ்கண்டவாறு வழங்கும்

**உத்தரவு**

அசல் வழக்கின் வழக்குரையினை மனுவில் கண்டபடி திருத்தம் செய்ய தகுந்த உத்தரவு பிறப்பிக்க வேண்டி Order 6 Rule 17 பிரிவின் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2)** மனுதாரர் / வாதி தரப்பு அபிடவிட்டின் சுருக்கம்:

அசல் வழக்கானது எதிர்மனுதார் / பிரதிவாதிக்கு எதிராக செயலுறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேற்படி வழக்குரை 10-வது பாராவில் **அ** பரிகாரத்தில் வாதிக்குச் சொந்தமானதும்

A SARAVANA SENTHIL KUMAR
Digitally signed by A SARAVANA SENTHIL KUMAR
Date: 2023.07.20 17:15:35 +0530

அவரது உடைமையிலும், சுவாதீனத்திலும் உள்ள வழக்குரைச் சொத்தில் பிரதிவாதியும் , அவரது வயைாட்களும் அத்துமீறி நுழைந்து ஆக்கிரமித்து தகர செட் அமைத்துள்ளதை அகற்றுமாறு செயல் உறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்கியும் என்பதற்கு பதிலாக , தவறுதலாக வாதியின் அமைதியான அனுபவத்திற்கும், சுவாதீனத்திற்கும் பிரதிவாதியோ அல்லது அவரது வாரிசுகளோ அல்லது அவரது வகையாட்களோ , ஏஜென்டுகளோ அத்துமீறி நுழைந்து எவ்வித ஆக்கிரமிப்பும் இடைஞ்சலும் தொந்தரவும் செய்யக்கூடாது என்று நிரந்தர தடையுறுத்துக்கட்டளை (Mandatory injunction) பரிகாரம் வழங்கியும் என்று குறிப்பிட்டுள்ள விபரம் தற்போது தான் தெரியவந்தது. எனவே, மேற்படி தவறினை திருத்தம் செய்ய அனுமதி கோரி மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3) எதிர்மனுதார் / பிரதிவாதிக்கு அழைப்பாணை சார்பு செய்யப்பட்டும், நீதிமன்றத்தில் அழைத்தும் ஆஜராகாத காரணத்தினால் எதிர்மனுதார் தோன்றா தரப்பினராக்கப்பட்டுள்ளார்.

4) இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை என்னவென்றால் மனுதாரர் தாக்கல் செய்துள்ள மனு அனுமதிக்கத்தக்கதா? என்பதாகும்.

5) மனுதார் தரப்பில் வாய்மொழி சாட்சியம் மற்றும் சான்றாவணங்கள் முன்னிலைப்படுத்தப்படவில்லை.

6) <u>**பிரச்னைக்கான தீர்வு:**</u>

மனுதார் / வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்குரையில் வழக்குரை 10–வது பாராவில் **அ** பரிகாரத்தில் வாதிக்குச் சொந்தமானதும் அவரது உடைமையிலும், சுவாதீனத்திலும் உள்ள வழக்குரைச் சொத்தில் பிரதிவாதியும் , அவரது வகையாட்களும் அத்துமீறி நுழைந்து ஆக்கிரமித்து தகர செட் அமைத்துள்ளதை அகற்றுமாறு செயல் உறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்கியும் என்பதற்கு பதிலாக , தவறுதலாக வாதியின் அமைதியான அனுபவத்திற்கும், சுவாதீனத்திற்கும் பிரதிவாதியோ அல்லது அவரது வாரிசுகளோ அல்லது அவரது வகையாட்களோ , ஏஜென்டுகளோ அத்துமீறி நுழைந்து எவ்வித ஆக்கிரமிப்பும் இடைஞ்சலும் தொந்தரவும் செய்யக்கூடாது என்று நிரந்தர

A SARAVANA SENTHIL KUMAR
Digitally signed by A SARAVANA SENTHIL KUMAR
Date: 2023.07.20 17:15:46 +0530

தடையுறுத்துக்கட்டளை (Mandatory injunction) பரிகாரம் வழங்கியும் என்று குறிப்பிட்டுள்ள விபரம் தற்போது தான் வாதிக்கு தெரியவந்ததாகவும், மேற்படி தவறினை திருத்தம் செய்யவில்லை என்றால் பல்வேறு சட்டப்பிரச்சனைகள் ஏற்படும் என்றும் எனவே வழக்குரையை திருத்தம் செய்ய அனுமதி வேண்டி மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக கூறப்பட்டுள்ளது.

7) எதிர்மனுதார் / பிரதிவாதி இம்மனுவிலும், அசல் வழக்கிலும் தோன்றா தரப்பினராகியுள்ளார்.

8) மனுதார் தரப்பு வாதம் பரிசீலிக்கப்பட்டது. வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள பிராதின் பரிகாரப் பகுதியில், வழக்குரை சொத்தில் பிரதிவாதி அமைத்துள்ள ஆக்கிரமிப்புகளை அகற்ற வேண்டும் என்று செயல் உறுத்துக்கட்டளை பரிகாரம் கோவருவதற்கு பதிலாக, தவறுதலாக பிரதிவாதி தாவா சொத்தில் உள்ள அமைதியான சுவாதீன அனுபவத்திற்கு இடைஞ்சல் செய்யக்கூடாது என்று உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக கூறப்பட்டுள்ளது. வழக்குரை சங்கதியை பரிசீலனை செய்ததில் தாவா சொத்தில் பிரதிவாதி அத்துமீறி நுழைந்து அமைத்துள்ள தகர செட் அமைத்துள்ளதாக கூறப்பட்டுள்ளது. எனவே, மனுவில் மேலே கூறப்பட்ட பரிகாரமானது கவனக்குறைவு காரணமாக ஏற்பட்டுள்ளது என்பது தெரியவருகிறது. வாதி மனுவில் கூறியுள்ள விபரங்களை வழக்குரையில் சேர்ப்பதன் மூலம் வழக்கு மூலம் மாறக்கூடும் என்றும் ஆட்சேபனை தெரிவிக்கப்பட்டுள்ளது. மேற்கண்ட சங்கதிகள் குறித்து முழுமையான விசாரணை மூலமே முடிவு காணப்பட வேண்டிய சூழ்நிலை உள்ளது என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

9) Rule 17 பின்வருமாறு விவரிக்ககிறது.

> *"R.17. Amendment of Pleadings.- The Court may at any stage of the proceedings allow either party to alter or amend his pleadings in such manner and on such terms as may be just and all such amendments shall be made as may be necessary for the purpose of determining the real questions in controversy between the parties:*

A SARAVANA SENTHIL KUMAR
Digitally signed by A SARAVANA SENTHIL KUMAR
Date: 2023.07.20 17:15:54 +0530

> *Provided that no application for amendment shall be allowed after the trial has commenced, unless the court comes to the conclusion that in spite of due diligence , the party could not have raised the matter before the commencement of trial.*

என்று கூறப்பட்டுள்ளது.

**10)** எனவே, இந்த வழக்கானது சாட்சிய விசாரணை ஆரம்பிக்கப்படாமல் நிலுவையில் உள்ள நிலையில் மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டுள்ள திருத்தல் மனுவை மனுவில் கூறியுள்ள காரணங்களின் அடிப்படையில் அனுமதிக்கலாம் என்று இந்நீதிமன்றம் கருதுகிறது. மேலும் மனுச் சங்கதிகள் குறித்து வழக்கின் முழுமையான விசாரணைக்குப் பின்னர் தான் தீர்வு காணமுடியும் என்பதாலும், மாண்புமிகு உயர் நீதிமன்றம் பல்வேறு வழக்குகளில் 06 R17–ன் படியான மனுக்களில் வழக்கு விசாரணை ஆரம்பிக்கப்படுவதற்கு முன்பான கால கட்டத்தில் இலகுவான அணுகு முறையை கையாளலாம் என்று கூறியுள்ளதன் அடிப்படையிலும், வழக்கு விசாரணை ஆரம்பிப்பதற்கு முன்பே திருத்தங்கள் மேற்கொள்ள அனுமதியளிப்பதன் மூலம் வழக்கு விசாரணக்குப் பின்னர் வழக்கு பெருக்கம் ஏற்படாமல் இருக்கும் என்பதாலும், மேற்படி திருத்தல் மனுவில் வழக்குரைச் சங்கதிகளைப் பொறுத்தே பரிகாரப் பகுதியில் திருத்தம் மேற்கொள்ள இருப்பதால் வழக்கு மூலம் மாறுவதற்கு வாய்ப்பில்லை என்றும், மேற்கண்டவாறு திருத்தல் மனு அனுமதிக்கப்படும் பட்சத்தில் அதனைப் பொறுத்து எதிர்தரப்பினர் குறுக்கு விசாரணை செய்யவும், தங்களது ஆட்சேபனையைப் பொறுத்து கூடுதல் எதிர்வழக்குரை தாக்கல் செய்யவும் போதிய வாய்ப்புள்ளது என்றும் இந்நீதிமன்றம் கருதுகிறது.

**11)** இந்த வழக்கைப் பொறுத்தவரை வழக்குரையின் சாராம்சங்களின் அடிப்படையில் வழக்கு செயல் வலியுறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்பது தெரியவருகிறது. ஆனால், வழக்குரை பரிகார காலத்தில் செயல் வலியுறுத்துக்கட்டளை பரிகாரம் கோருவதற்கு பதிலாக நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரப்படுவதாக தவறுதலாக வழக்குரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்பது தெரியவருகிறது. எனவே, வழக்கு விசாரணை

A SARAVANA SENTHIL KUMAR
Digitally signed by A SARAVANA SENTHIL KUMAR
Date: 2023.07.20 17:16:05 +0530

ஆரம்பிக்கப்படாத நிலையில் மனுதார் கோரியபடி வழக்குரையை திருத்தம் செய்ய அனுமதிக்கப்படாத பட்சத்தில் வழக்கினை இறுதியாக தீர்வு காண இயலாத நிலை ஏற்படக்கூடும் என்று இந்நீதிமன்றம் கருதுகிறது. எனவே மனுதாரர் / வாதி மனுவில் கூறியுள்ள படி வழக்குரையை திருத்திக் கொள்ள அனுமதியளித்து உத்தரவிடப்படுகிறது.

**12)** இறுதியாக,

| | |
|---|---|
| 1. | இடைநிலை மனு எண். 3/2023 அனுமதிக்கப்படுகிறது. |
| 2. | செலவுத் தொகை இல்லை. |

இந்த உத்தரவானது முழுவதும் என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் வரி வடிவில் எடுக்கப்பட்டு கணிணியில் தட்டச்சு செய்து விரிவாக்கம் செய்யப்பட்டு என்னால் பிழை திருத்தம் செய்யப்பட்டு இன்று 20-07-2023-ம் தேதியில் அவையறிய பகரப்பட்டது.

A SARAVANA SENTHIL KUMAR

Digitally signed by A SARAVANA SENTHIL KUMAR
Date: 2023.07.20 17:16:14 +0530

**மாவட்ட உரிமையியல் நீதிபதி,**
**உத்தமபாளையம்.**

-

I.A.3/2023

in

O.S. 101/2022

FAIR / DRAFT ORDER

Date : 20-07-2023

மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், உத்தமபாளையம்.

**முன்னிலை: திரு. A. சரவண செந்தில் குமார், B.Com., B.L.,**
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
உத்தமபாளையம்.

திருவள்ளுவராண்டு 2054 ஸ்ரீ சோபகிருது வருடம் ஆடி மாதம் 04-ம் நாள்
2023-ம் ஆண்டு ஜுலை மாதம் 20-ம் நாள் வியாழக் கிழமை

**IA 3/2023 /in/ OS 101 /2022**

(Original Suit CNR No. TNTH06-000-153-2022)

| | |
|---|---|
| 1. | தேனி மாவட்டம், உத்தமபாளையம் தாலுகா, கம்பம் டவுன், வார்டு-11, கம்பம் மெட்டு காலனி, கதவு எண்.130-ல் வசித்து வரும் திரு. இராஜேந்திரன் அவர்களின் குமாரர் இந்து சுமார் 40 வயதுள்ள திரு.R. மகேந்திரன். |

.... மனுதாரர் /வாதி

| | |
|---|---|
| 1 | தேனி மாவட்டம், உத்தமபாளையம் தாலுகா, கம்பம் டவுன், வார்டு-11, கம்பம் மெட்டு காலனியில் வசித்த வரும் திரு. சுருளி அவர்களின் குமாரர் இந்து சுமார் 30 வயதுள்ள திரு.S. ரவிக்குமார் என்ற ரவி. |

... எதிர்மனுதார் / பிரதிவாதி

அசல் வழக்கின் வழக்குரையினை மனுவில் கண்டபடி திருத்தம் செய்ய தகுந்த உத்தரவு பிறப்பிக்க வேண்டி Order 6 Rule 17 பிரிவின் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது

| | |
|---|---|
| மனு தாக்கல் செய்யப்பட்ட நாள் | 17-04-2023 |
| நீதிமன்ற கட்டணம் | ரூ.20/- செலுத்தப்பட்டது. |

இம்மனுவானது 13-07-2023-ம் தேதி என் முன்பாக இறுதியான விசாரணைக்கு வந்தபோது மனுதாரர் / வாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. த. மீனாட்சி சுந்தரம் அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதார் நீதிமன்றத்தில் அழைத்தும் ஆஜராகாத காரணத்தினால், எதிர்மனுதாரருக்கு எதிராக 01-07-2023-ம் தேதி ஒருதலைபட்சமாக்கப்பட்டும், தோன்றா தரப்பினராக்கப்பட்டும் மனுதார் தரப்பு வாதங்கள் கேட்கப்பட்டும் ஆவணங்களை பரிசீலனை செய்தும் இதுநாள் வரை என் கவனமான பரிசீலனையில் இருந்து வந்தும் இன்று இந்நீதிமன்றம் கீழ்கண்டவாறு வழங்கும்

A SARAVANA SENTHIL KUMAR
Digitally signed by A SARAVANA SENTHIL KUMAR
Date: 2023.07.20 17:16:25 +0530

<u>**நிறைவேற்றாணை**</u>

| | |
|---|---|
| 1. | இடைநிலை மனு எண். 3/2023 அனுமதிக்கப்படுகிறது. |
| 2. | செலவுத் தொகை இல்லை. |

<u>**செலவுத் தொகை இல்லை**</u>

2023-ம் வருடம் ஜுலை மாதம் 20-ம் நாள் எனது கையொப்பமும் இந்நீதிமன்ற முத்திரையும் இடப்பட்டது.

A SARAVANA SENTHIL KUMAR

Digitally signed by A SARAVANA SENTHIL KUMAR
Date: 2023.07.20 17:16:37 +0530

***மாவட்ட உரிமையியல் நீதிபதி,***
***உத்தமபாளையம்***.

| |
|---|
| I.A.3/2023 |
| in |
| O.S.101/2022 |
| EX ORDER |
| Date : 20-07-2023 |